கம்பௌண்டர்கள், நர்ஸுகள் இவர்களின் எண்ணிக்கை முன்னால் இருந்த படியேதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதையும் அதிகப் படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது உண்மைதான். ஆனால் இப்போது படுக்கைகளும் நான்கு மடங்காகி இருக்கிறது. முன்பு 22 பெட்களாக இருந்தது இப்போது 80 பெட்களாக ஆகியிருக்கிறது.

Silk Farm

* 220 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the stage at which the establishment of a silk worm industry at Tenkasi in Tirunelveli district is?

THE HON. SRI R. VENKATARAMAN : An extent of 1·60 acres of land belonging to a private party has been selected and occupied on 14th June 1958 pending acquisition under the Land Acquisition Act, for the establishment of a Demonstration Silk Farm at Tenkasi. Mulbarry grafts, sapplings and cuttings have been planted.

SRI K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் மல்பரி மரங்கள் மாத்திரம் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அடுத்ததாக ஒரு வீவிங் பிளாண்ட் ஆரம்பிப்பதற்குச் சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போதுதான் மல்பரி மரங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் வளர்ந்து, அதி லிருந்து பட்டுப்பூச்சிகள் வளர்ந்து அதிலிருந்து பட்டு நூல்கள் கிடைக்கக் கூடிய நேரத்தில்தான் இந்த வீவிங் பிளாண்ட்டைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றிப் பின்னால் தான் சொல்ல முடியும்.

Godavari and Krishna waters

* 221 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1-6-58-ல் உதகையில் கூடிய தென் மண்டலக் கவுன்ஸிலில் கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வர ஆலோசிக்கப்பட்டதா ?

(ஆ) அப்படியாயின் அதன் முடிவு என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) இல்லை ஐயா.

(ஆ) இக் கேள்வி எழாது.

SRI S. M. ANNAMALAI : தலைவர் அவர்களே, இந்த கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்தால் வட ஆற்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும் என்ற காரணத்தால் இதற்காக ஆந்திரா அரசாங்கத்தோடு கலந்து இதை உடனடியாகக் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : சமீபத்தில் ஹைதராபாத்தில் நடந்த ஸோனல் கவுன்ஸிலில் கலந்துகொண்ட ஆந்திர முதல் மந்திரி அவர்களே இந்தத் தண்ணீரை சென்னை ராஜ்யத்திற்குக் கொடுப்பதற்கு முன் வந்திருப்ப

13th September 1958]

தாக சொன்னூர்கள். இதற்காக அவர்களுடைய சீப் இஞ்சீனீயரை கேட்டு முடிவு செய்யலாம் என்றும் சொல்லியிருக்கிறூர்கள். இதற்காக நாம் அவர்களை பாராட்டவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : கோதாவரி, கிருஷ்ணு தண்ணீரைத் தெற்கே கொண்டுவரவேண்டுமென்று முயற்சிக்கின்றபோது, கோதாவரி, கிருஷ்ணு நதிகளில் பெரு வெள்ளம் காரணமாக அங்குள்ள மக்கள் மிகவும் துன்பத்தில் இருப்பதால் இனிமேல் இவைகளைத் தடுக்க உடனடியாகச் சில திட்டங்களை போட்டு நிறைவேற்றுகிற இந்த நேரத்தில் அந்தத் திட்டங்களிலே கலந்து கொள்ள நமது சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இந்த சமயத்திலே பேசுவது என்பது நல்லதல்ல. ஏற்கெனவேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆபத்தில் இருக்கும் சமயத்தில் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லுவது நல்லதல்ல.

* 222 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to Question No. 16 answered on 27th June 1957, the present stage of the proposal to utilize the waters of the Godavari river for irrigation purposes in this State?

THE HON. SRI P. KAKKAN : The question of utilization of the waters of the Godavari and the Krishna for the benefit of the State was generally discussed and the matter was referred to the Chief Engineer, Andhra Pradesh, for a preliminary technical report. On receipt of that report the Zonal Council will consider the matter again.

Electric motors

* 223 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எத்தனை விவசாய மின்சார மோட்டார்கள் 1958-ஆம் ஆண்டில் பெறுவதற்காக அரசாங்கம் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது ?

(ஆ) உள் நாட்டு உற்பத்தி மூலமாக எத்தனை விவசாய மின்சார மோட்டார்கள் கிடைக்கலாம் ?

(இ) இறக்குமதி மூலமாக எத்தனை விவசாய மின்சார மோட்டார்கள் பெறுவதற்காகத் திட்டமிடப்பட்டு வருகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) About 15,000 numbers.

(*b*) About 50,000.

(*c*) Nil.

Births and deaths

* 225 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1955 முதல் 1957 வரையில் நமது ராஜ்யத்தில் வருடவாரியாக ஜில்லாவாரியாக எத்தனை குழந்தைகள் பிறந்தன ?

(ஆ) எத்தனை இறந்தன ? (5 வயதுக்கு உள்பட்டது).

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement[b] is placed on the table of the House.

---

[b] Printed as Appendix III on page 874 infra.